<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

அ.வ. எண். 387/2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ஞானம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 09ஆம் நாள் புதன்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நாங்கள் மொத்த பணம் ரூ.2,00,000/- கொடுத்தோம். அதில் நான் ரூ.1,00,000/- கொடுத்துள்ளேன். நான் ஒரு தேதியிலும், என் கணவர் ஒரு தேதியிலும் பணம் கொடுத்தோம் என்றால் சரிதான். செய்யாறு பஜாரில் உள்ள ஒர நாயுடு கடையில் வைத்து பணம் கொடுத்தோம். பணம் கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் அர்ஜீனன், என்னுடைய கணவர் பிச்சாண்டி, பிரதிவாதியின் மகன் ஞானம். இருந்தார்கள். பாண்டை எழுதியவர் கடையில் வேலைபார்க்கும் கண்ணன். மேற்படி பாண்டில் ஞானம், பிச்சாண்டி சாட்சி கையெழுத்து செய்தார்கள், பாண்டு எழுதியவர் கையொப்பம் செய்தார். பணம் வாங்கியதற்கு பிரதிவாதி மாதாமாதம் வட்டி கொடுத்தாரா என்றால் இல்லை. நான் விவசாய வேலை செய்கிறேன். எனக்கு என்று தனியாக சேமிப்பு இருக்கிறதா என்றால் இருக்கிறது. என் கணவர் பணம் எந்த தேதியில் கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. என் கணவர் பணம் கொடுத்த விவரம், வட்டி

வாங்கிய விவரம் குறித்து என்னிடம் சொல்வாரா என்றால் எப்போதாவது சொல்வார். என் கணவர் வட்டி விடும் தொழில் எதுவும் செய்கிறாரா என்றால் இல்லை. பணம் அர்ஜீனன் என்பவர் என்னிடம் வாங்கவில்லை என்றும் என் கணவரிடம் தான் ரூ.1,00,000/- வாங்கினார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய ரூ.1,00,000/-த்திற்கு அவருடைய மகன் ஞானத்தின் வங்கி மூலமாக வட்டியும் மற்றும் சிறுகசிறுக அசல்தொகையும் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோல யார் வாங்கிய கடனுக்காக கொடுத்தார் என்று தெரியவில்லை. அதேபோல மேற்படி தொகை வங்கிமூலம் ஞானம் அனுப்பியது குறித்து கேட்டீர்களா என்றால் இல்லை. ஞானத்தை பார்த்திருக்கிறீர்களா என்றால் எதிர்வீட்டிற்கு வருவார் பார்த்திருக்கிறேன். ஞானம் என்ன வேலை செய்கிறார் என்றால் வழக்கறிஞராக வேலை செய்கிறார். ஞானம் வழக்கறிஞராக இருந்து போதுமான பணம் இருக்கிறது என்றும் அவர் என் கணவரிடம் பணம் வாங்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. அர்ஜீனன் எந்த ஊர் என்றால் ஆயலவாடி கிராமம். எங்கள் ஊருக்கும் அர்ஜீனன் ஊருக்கும் சுமார் 30கி.மீ தூரம் இருக்குமா என்றால் தெரியாது. பிரதிவாதி தூரத்தில் இருப்பதால் நேரடியாக வரமுடியாத காரணத்தினால் அவர் மகன் மூலமாக என் கணவருக்கு தொகை அனுப்பினார் என்றும் அதற்கான ஆவணம் தாக்கல் செய்கிறோம் என்றால் சரியல்ல. அர்ஜீனன் என் கணவரிடம் தான் ரூ.1,00,000/- வாங்கினார் என்றும் அதற்கான 2 புரோநோட்டுக்கள் வாங்கப்பட்டது என்றும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல, என்னிடம் தான் கடன் வாங்கினார். மேலும் நான் நாயுடு கடைக்கு வரவேயில்லை என்று சொன்னால் சரியல்ல. அர்ஜீனன் தனது மகன் மூலம் வங்கி வழியாக ரூ..2,50,000/- மேல் பணம் அனுப்பியுள்ளார் என்றும் அதேபோல நேரடியாகவும் பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல, மேலும் ஞானம் வாங்கிய கடனுக்காக தான் என் கணவருக்கு பணம் அனுப்பியிருந்தார். ஞானம் கடன் வாங்கிய விவரத்தை இந்த வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. அர்ஜீனன் இந்த வழக்கில் எதிருரை

தாக்கல் செய்தபிறகு தான் ஞானம் கடன் வாங்கியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடனே வாங்கவில்லை என்றும், என் கணவரிடம் கொடுக்கப்பட்ட பாண்டை தவறாக பயன்படுத்தி என் கணவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதிவாதியின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

என் கணவர் கொடுத்த ரூ.1,00,000/-மும் நான் கொடுத்த ரூ.1,00,000/- மும் ஒரே தேதியில் கொடுக்கப்பட்டதா என்றால் ஞாபகமில்லை.